## தலைப்பு 227 – ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2019 டிசம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை

தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளது உறுதியான தன்மை,கணக்கீடுமதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களது கட்டமைப்பும் உள்ளடக்கமும் தொடர்பாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலும் சம்பவங்களும் நியாயமாக உள்ளடங்கி உள்ளதுடன் வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டு மொத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டும் உள்ளன.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரை அமுலாக்கப்பட்டது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி கணனி அச்சிடல் நிலையான சொத்துப் பதிவேடு (BOS REPORT) மற்றும் நிதிக்கூற்றுக்களைக் கணக்கிணக்கம் செய்யும் போது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 5 நடைமுறை அல்லாத சொத்துக்களது கூட்டுத்தொகையில் ரூபா 66,074,739 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பிழையற்ற சொத்து மீதி பதிவு செய்யப்பட வேண்டும். | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நடைமுறை அல்லாத சொத்துக்களது அறிக்கையாக அச்சிடப்படக் கூடியது கணனி அச்சிடல் நிலையான சொத்துப் பதிவேடே (BOS REPORT) ஆகும். 2019.12.31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்குரியதும் பயன்படுத்தப்படுவதுமான சகல நடைமுறை அல்லாத சொத்துக்களும் இதில் உள்ளடங்கும் அச்சொத்துக்களின் ஆரம்ப |

| | | |
|---|---|---|
| | | மீதி மற்றும் ஆண்டின் போதான கொள்வனவுகள், நீக்குதல் என்பன வெவ்வேறாகப் பெறப்படுவதற்கு CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் வசதி கிடையாது. |

**1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கை பரிசீலிக்கையில் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு திறைசேரிக் கணனி அச்சிடற் பிரதி ரூபா 95,375,184 ஆகவிருந்தது. திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறான மீதி ரூபா 95,368,040 ஆகும். மீதிகளுக்கு இடையே ரூபா 7,144 வித்தியாசம் நிலவியது. | இவ்வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். | 2014, 2015 ஆம் ஆண்டுகளில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் எமது திணைக்களத்திற்குரிய பிரதேச செயலகங்களில் பணியாற்றும் ஆண்டு இறுதிக்கடன் மீதிகள் பிரதேச செயலகங்களின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலானவை. அக்காலப்பகுதியின் போது பிரதேச செயலகங்களின் மூலம் இத்திணைக்களத்தின் முற்பண பீ கணக்கில் தவறாக வரவு வைக்கப்பட்டும் செலவு வைக்கப்பட்டும் இருந்ததால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது.<br><br>எதிர்காலத்தில் இது தொடர்பாக மேலும் பரிசீலனை செய்து தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்படும். |

**1.6.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் (திருத்த) அதிகாரச்சட்டம் - 2 ஆம் பிரிவு | இலங்கை பிரசைகள் யாவரையும் பதிவு செய்வதற்கான ஆட்களது தரவுப் பெயர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. தேசிய அடையாள அட்டைத் தயாரிப்புக்கு பெறப்பட்ட தரவுகளின் மென் அணி பிரதிகள் மாத்திரம் உள்ளதுடன் அது தரவுப் பெயர்ப்பட்டியலாக அமையவும் மாட்டாது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சகல பிரசைகளும் பதிவு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சகல பிரசைகளையும் பதிவு செய்வதற்கு கவனம் செலுத்தி அரச கொள்கைகளுக் கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவின விடயங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 12,0200,000 ஆகும். நிதிப் பிரமாணங்கள் 66/69 மற்றும் குறை நிரப்பு மதிப்பீடு என்பவறறின் மூலம் முறையே ரூபா 5,000,000 மற்றும் ரூபா 71,000,000 மாற்றம் செய்யப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 3,000,000 எஞ்சியிருந்தது. காட் அட்டைகள் பற்றாக்குறையே இதற்கான காரணம் என அறிவிக்கப்பட்ட போதும், அதனை ஏற்றுக் கொள்வதிற்கில்லை. | தேவையை உணர்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும். | 2019.09.17 ஆந் திகதிய அமப/19/2307/114/051-1 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ஏற்கனவே அச்சிடப்பட்ட 1 மில்லியன் காட் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2019 நவம்பர் மாதத்திலிருந்தே திணைக்களம் அவற்றைப் பெற ஆரம்பித்திருந்தது. ஆகவே, முன் கூட்டிலே அச்சிடப்பட்ட காட் அட்டைகள் பற்றாக்குறையாகி 2019 ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் தேசிய அடையாள அட்டைகளை எதிர்பார்த்தவாறு அச்சிட முடியாது அஞ்சல் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | ஊடகச் செலவின விடயத்தின் (1402) கீழ் அடையாள அட்டைகளை அஞ்சலில் அனுப்பி வைப்பதற்கான செலவினம் மற்றும் முன்கூட்டியே அச்சிடப்பட்ட காட் அட்டைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகள் செலவின விடயத் (2509) தின் கீழ் அடையாள அட்டை அச்சிடலுக்கான செலவினம் என்பன எஞ்சியமை அவதானிக்கப்பட்டது. |

**2.2 பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படல்**

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 94(1) க்கமைய வேறு விதத்தில் ஏற்பாடு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அல்லது வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாடு இருந்தாலேலன்றி எந்தவொரு வேலைக்கோ அல்லது வழங்கலுக்கோ செலவு மேற்கொள்ளப் படாலாகது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் நிதியேற்பாட்டின் எஞ்சியவற்றிற்கு அதிகமாக ரூபா 4,484,507 பொறுப்புகள் எஞ்சியிருந்தன. | மீளாய்வாண்டினது செலவினத்தைக் கருத்திற் கொண்டு நிதியேற்பாட்டிலும் கூடிய பொறுப்பு ஏற்படலாகாது. | மின்சாரமும் நீரும்<br>--------------------------------<br>குறித்த கால வரம்பிற்குள் பில் கிடைக்கப் பெறாமையால் கட்டுப்படுத்த முடியாத பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன.<br><br>ஏனைய செலவினம்<br>-----------------------------------<br>தலைமை அலுவலகத்தினதும் மாகாண அலுவலகங்களதும் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைப் பிரிவுகளது பில் அடுத்து வரும் மாதத்திலேயே சமர்ப்பிக்கப்படுகின்றதால் இவ்வாறான பொறுப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் நிதியேற்பாட்டில் எஞ்சிய ரூபா 2,573,360 தொகையை விட அதிகமாக ரூபா 136,341,641 க்கான பொறுப்பு ஏற்பட்டிருந்தது. | நிதியேற்பாடு எஞ்சுவதைக் கருத்திற் கொண்டு கடப்பாடு ஏற்பட வேண்டும். | 2019 செப்டம்பர் 17 ஆந் திகதிய அமப/19/2307/114/051-1 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கமைய ஒரு மில்லியன் முன்கூட்டி அச்சிடப்பட்ட காட் அட்டைகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்போது, 2019.09.19 அன்று வழங்குனருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது 250,000 முன்கூட்டி அச்சிட்ட அட்டைகளை நிறுவனம் வழங்கியிருந்தது. அதற்கான கொடுப்பனவு 2019 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதற்கமைய, எஞ்சிய 750,000 காட் அட்டைகள் 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்டதால் கடப்பாடு ஏற்பட்டது. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டத்திற்கு ரூபா 500 மில்லியன் அமைச்சினால் நிதியேற்பாடு செய்யப்பட்டு அதில் ரூபா 251.83 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது அதற்கமைய, ஆண்டிற்கான நிதியேற்பாட்டில் 50 சதவீதமான ரூபா 248 மில்லியன் எஞ்சியிருந்தது. | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்ட நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள VPN தொடர்பாடலுக்கான கொடுப்பனவு செய்யப்படும் 2019.10.31 அன்று செயற்திட்டம் முடிவடைந்ததனால் நிதிஏற்பாடு இல்லாது 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கொடுப்பனவு நடைபெறாமை மற்றும் பிரதான பொருட் கொள்வனவாகிய கைவிரல் அடையாள இயந்திரக் கொள்வனவு, e-NIC |

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு பிரதேச அலுவலகங்களுக்கு ஏனைய தொழில்நுட்ப உபகரணக் கொள்வனவு செய்யும் செயற்திட்டம் நீடிக்கப்படாது. தற்காலிகமாக இடைநிறுத்தப்படல், IC AO புகைப்படங்களைப் பெறுவதற்குரிய மென் அணியைக் கொள்வனவு செய்யாமை என்பன காரணமாக இவ்வாறாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி எஞ்சியிருந்தது. |
| (ஆ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான 36 துணைப் பணிகளுள் 16 பணிகள் எதுவித உருப் படி முன்னேற்றமும் இல்லாதிருந்தன. அதில் 11 பணிகளை நிறைவேற்ற முடியா மைக்கு செயற்திட்டக் கால நீடிப்பு தொடர்பாக 2019 டிசெம்பர் 31வரை நிச்சயமற்ற தன்மை நிலவியதாலேயே எனக் கூறப்பட்டது. அதன் காரணமாக, 10 முதல் 25 சதவீதம் வரையான மிகவும் குறைந்த உருப்படி முன்னேற்றத்தை மாத்திரமே ஈட்டிய 08 பணிகள் அவற்றுக் கிடையே இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதனை துரிதப்படுத்த வேண்டும். | திட்டமிடப்பட்ட பெருமளவு பணிகளுக்கான பொருட் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டிருந்தன. தரவுகளை இலத்திரனியல் படுத்தும் பணியானது மீளாய்வு செய்யப்பட்ட செயற்திட்ட அறிக்கை கிடைக்கும் வரை இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. எனினும், திட்டமிடப்பட்ட பணிகளும் அவற்றிற்குரிய பொருட் கொள்வனவும் 09 மாதம் போன்ற குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட முடியாமையாலும் தரவுக் சேகரிப்புக்கு மேலும் 1 ½ அல்து 2 ஆண்டுகள் வரை தேவைப்படுவதாலும் குறிப்பிடப்பட்ட 16 பணிகளை நிறைவேற்ற இயலவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்திற்கு ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டு டிசம்பரில் | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதனை துரிதப்படுத்த வேண்டும். | இம்மாகாண அலுவலக நிர்மாணப் பணிக்குத் தேவையான காணி, கட்டிடம் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை வசதியுடன் கூடிய |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும் ஊவா மற்றும் சபரகமுவ மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இடத்தை தெரிவு செய்ய முடியாமையால் அவை ஆரம்பிக்கப்படவில்லை. எவ்வாறெனினும், இச்செயற்திட்டத்தை 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2019 டிசம்பரிலும் நிறைவேறவில்லை. | | காணியையோ கட்டிடத்தையோ பெற முடியாமையால் திட்டமிட்டவாறு பணிகளை நிறைவேற்றுவதற்கான அலுவலகத்தை நிறுவ முடியவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கேகாலை பிரதேச செயலகப் பிரிவில் அடையாள அட்டைகள் இல்லாத நபர்களது தகவல்கள் 2018 ஆம் ஆண்டில் கிராம சேவைப் பிரிவுவாரியாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 55 பிரிவுகளில் 1097 பேரிடம் அடையாள அட்டைகள் இருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு வரை இது நீடித்தது. | இலங்கையர்கள் அடையாள அட்டைகளை வைத்திருப்பது பிரதேச மட்டத்தில் அறிவுறுத்தப்பட வேண்டும். | அடையாள அட்டைகளைப் பெறாத நபர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைத் திணைக்களம் தற்போது செயற்படுத்தியுள்ளது. |

### 3.2 இழப்பீடுகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஹம்பாந்தோட்டை சூரியவெவ தொழில்நுட்ப பூங்காவில் | எஞ்சிய தொகையை அந்நிறுவனத்திட மிருந்து பெறுவதற்கு | CECB நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 11,776,333.75 ஆகும் |

| | | | |
|---|---|---|---|
| | இடர் நிவாரண தரவு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ரூபா 68.5 மதிப்பீட்டிலான பணிக்கு பொறியியல் துறையைச் சார்ந்த மத்திய உசாத்துணைப் பணியகத்திற்கு ரூபா 11,776,333 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்நிலையத்தை அமைப்பது வேறொரு இடத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டதால் 3 சந்தர்ப்பங்களில் பணியகம் திருப்பிச் செலுத்தியிருந்த தொகை ரூபா 9,901,137 ஆகும். எவ்வாறாயினும், கணக்காய்வுத் தினம் வரை எஞ்சிய ரூபா 1,875,196 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதில் ரூபா 4,000,000 செயற்திட்டத்திற்கு 2018.10.05 ஆந் திகதியன்றும் ரூபா 4,000,000 செயற்திட்டத்திற்கு 2019.01.16 ஆந் திகதியன்றும் ரூபா 1,901,137.27 செயற்திட்டத்திற்கு 2019.05.29 ஆந் திகதியன்றும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, அறவிட வேண்டிய தொகையில் ரூபா 1,901,137.27 செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சு வழங்கும் பெறுமதி சேர் வரிச் சலுகையை நிதி அமைச்சிடமிருந்து செயல் திட்டம் பெறாததால் (VAT) CECB நிறுவனம் சாதாரண வரிக் கணிப்பை மேற்கொண்டுள்ளது. ஆகவே, எஞ்சிய ரூபா 1,875,196.48 CECB நிறுவனத்தால் திருப்பிச் செலுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என 2019.05.28 ஆந் திகதிய CB/ERC/SP/POH/D/826/017 கடிதத்தின் மூலம் செயற்திட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது அடையாள அட்டைகளை அச்சிடும் போது பல்வேறு குறைபாடுகள் காரணமாக சாதாரண சேவையின் கீழ் 2 முதல் 14 சதவீதமும் ஒருநாள் சேவையின் கீழ் 6 முதல் 9 சதவீதமும் சேதமாகி இருந்தன. எவ்வாறாயினும், இந்த 76,608 காட் அட்டைகள் | அச்சிடும் போது ஏற்படும் பல்வேறு குறைபாடுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | தமிழில் தகவல்களை உள்ளடக்கையில் ஏற்படும் தவறுகளால் அடையாள அட்டைகளை மீண்டும் அச்சிட வேண்டி ஏற்படுவதுடன் இதற்குப் பிரதானமாக அமைவது சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பணி புரிவதற்கான உத்தியோகத்தர்களது பற்றாக்குறையுமே ஆகும். தேவையான தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| சம்பந்தமாகவும் திணைக்களம் ரூபா 9,895,402 கிரயச் செலவழிப்புக்குள்ளாகி இருந்தது. | | திணைக்களத்திற்குக் கிடைக்காமையால் இப்பிரச்சினை இதுவரை தீராதுள்ளது. |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சூரியவெவ இடர் நிவாரண தரவு நிலையத்தில் பொருத்தப்பட்ட மின்மாற்றிக்காக குருநாகல் வெவகெதர காணியில் இடர் நிவாரண தரவு நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னரே செயற்திட்டத்திற்குத் தொழிலாளர் செலவினமாக ரூபா 87,840, மற்றும் இலங்கை மின்சார சபைக்கு வழங்குதல் கட்டணமாக ரூபா 5,636,195 வைப்புப் பணமாக ரூபா 187,500 என்பன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஆக்கபூர்வப் பணிகளை இனங்கண்டு செலவு மேற்கொள்ள வேண்டும். | குருநாகலையில் அமைக்கப்படவிருந்த 150 KVA (216A) மின்மாற்றி ஒன்றைப் பொருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சூரியவெவவில் இருந்த மின்மாற்றியை அந்நிலையத்தில் பொருத்துவதற்கு செலவின மதிப்பீட்டைத் தருமாறு செயற்திட்டம் பணிப்பாளர் 2018.02.16 ஆந் திகதியன்று தென்மாகாண மின்சார சபைக்கு அதனை அனுப்பியிருந்தார். அதற்குப் பதில் வழங்கும் முகமாக அவ்வாறான இடமாற்றத்திற்கு இலங்கை மின்சார சபையின் 2016.07.11 ஆந் திகதிய 2016/DCC/COM/12 சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த வழங்கல் உபகரணத்தையும் கழற்றி அகற்றுவதற்கு ரூபா 87,840 தொழிலாளர் செலவினமாக அமைந்தது. எஞ்சிய தொகையுடன் 150KVA (216A) மின்மாற்றி குருநாகலையில் பொருத்துவதற்கு குறித்த கழிவைக் கவனத்திற் கொண்டதையடுத்து தேவைப்படும் மதிப்பீட்டுத் தொகை ரூபா 2,316,489.80 எனக் கணிப்பிடப்பட்டது. |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12 ஆம் வழிகாட்டலின் (அ) மற்றும் (ஆ) பந்திகளுக்கு விதிவிலக்காக 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மில்லியன் காட் அட்டைகளை சுயாதீன ஆய்வுகூடம் ஒன்றிற்கு அனுப்பி அதனைப் பரிசீலிப்பதற்கோ அல்லது கொடுப்பனவுக்கு முன்னர் செயற்பாட்டுப் பிரிவிடமிருந்து காட் அட்டைகளது அச்சுத் தன்மை மீதான உறுதியையோ பெறாது கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 161.09 மில்லியன் ஆகும். | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் இடைக்காலக் கொடுப்பனவு, இறுதிக் கொடுப்பனவு ஆகியவற்றை மேற்கொள்வதற்கு முன்னர் வழங்கப்பட்ட காட் அட்டைகளது தரத்தை சுயாதீனமாகப் பரிசீலிக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) ஆணையாளரது (செயற்பாடு) கடிதத்தின் பிரகாரம் முன்னரே அச்சிடப்பட்ட காட் அட்டைகள் சம்பந்தமாக பாதுகாப்பான கையிருப்பு மட்டத்தை முறையாகப் பேண இயலாது என்றும் மீண்டும் கட்டளை வழங்கும் மட்டத்தைப் பேண இயலாது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அடையாள அட்டை விநியோகம் போன்ற | போட்டியினூடாக தரமான காட் அட்டைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு சிறந்த கையிருப்புக் கட்டுப்பாடு திணைக்களத்திடம் கிடையாது என இதற்கமையக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | தற்காலிக (Interim) தேசிய அட்டையானது இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அறிமுகம் செய்யும் வரையே வழங்கப்படுவதுடன், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்படுவது தாமதம் ஆவதால் இத்தற்காலிக தேசிய அடையாள அட்டைகளுக்கென இதுவரை ரூபா 360,140,662 செலவிடப்பட்டிருந்தது. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை பூர்த்தி அடையாததுடன் 2019 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அங்கீகாரத்துடன் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே, 2011 முதல் 2020 செப்டம்பர் வரை செயற்திட்டத்தினது மொத்தச் செலவினம் ரூபா 2,250,680,000 ஆகவிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் தினம் வரை இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்கும் | தேசிய அடையாள அட்டையை அறிமுகம் செய்வது அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாளாந்த தேசிய அட்டை விண்ணப்ப தாரர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரமும் குறைந்த காலத்தில் அவற்றை வழங்குவதற்கும் கூடியவாறான விதிமுறை தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் செயற்படுத்தப் படாதிருந்தது. | | |
| (ஈ) | கேகாலை, இரத்மலானை, மொறட்டுவ பிரதேச செயலகங்களில் சாதாரண சேவையின் கீழ் அடையாள அட்டையைத் தயாரிப்பதற்கு கிராம உத்தியோகத்தர் களினூடாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களப் பிரிவில் கிடைக்கப் பெற்ற 50 குறைபாடுகள் உள்ள விண்ணப்பங்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 06 மாதங்களாக இருந்து வந்தன. | தாமதமின்றி அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவை பிரதேச அலுவலகங்களால் பதிவேடுகள் பரிசீலிக்கப்பட்ட தையடுத்து திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பங்களாகும். அவ்வாறான விண்ணப்பங்கள் தொடர்பாக வாராந்தம் சுற்றறிக்கைகள் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் இது தொடர்பாக விசாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தாமதமின்றி விண்ணப்பங்களை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | அடையாள அட்டை தயாரிப்புக்கு வழங்கப்படும் விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகளுடன் கூடிய ஆவணங்கள் காரணமாக தலைமை அலுவலக சட்டப்பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 28 விண்ணப்பங்க்ள கேகாலை, இரத்மலானை, வேல்ல வீதி, மொறட்டுவ ஆகிய பிரதேச செயலக அலுவலகங்களில் தேங்கி இருந்தன. இவ்விண்ணப்பங்கள் தொடர்பாக 31 முதல் 229 நாட்கள் கழிந்திருந்தன. | அடையாள அட்டையைப் பெறுவதற்குத் சரியான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு சகல இலங்கையர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும். | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் விண்ணப்பங்கள் சட்டப் பிரிவுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஆகும். தற்சமயம் விசாரிக்கப்பட்ட வாறுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஊ) சாதாரண சேவையின் கீழ் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு கிராம உத்தியோகத்தர் களினூடாக கேகாலை, இரத்மலனானை, வேல்ல வீதி, மொறட்டுவ பிரதேச செயலகங்களினூடாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் போது 14 முதல் 325 நாட்கள் கழிந்திருந்த 2226 சந்தர்ப்பங்கள் நிலவின. | தாமதமின்றி அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். | விண்ணப்பங்களை பிரதேச அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்கும் கிராம உத்தியோகத்தர்கள் சமூகமளிக்கும் தினத்தில் அது தொடர்பாக அவர்களுக்கு உணர்த்தி தாமதத்தைத் தவிர்ப்பதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

**4. நல்லாளுகை**

**4.1 பொதுமக்களது சேவைகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தனிநபர் அடையாளத்தை உறுதி செய்வதற்கு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்காக முன்கூட்டியே அச்சிடப்பட்ட காட் அட்டைகள் 2016 முதல் கொள்வனவாகி இருந்தன. 2019 ஆம் ஆண்டில் 173,000 ஆரம்ப காட் அட்டை மீதி காணப்பட்டது. அவ்வாறிருக்க, 2019 ஆம் ஆண்டில் 01 மில்லியன் காட் அட்டைகளைக் கொள்வனவு செய்யப்பட்டும் 76,608 காட் அட்டைகள் இழப்பு அல்லது பழுதடைந்து (Due spoil) போனமையும் காரணமாக 106,608 காட் அட்டைகள் எஞ்சியிருந்தன. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியில் 383,465 விண்ணப்பங்கள் வழங்கப்பட வேண்டியிருந்ததால் ஆண்டின் இறுதியில் 276,857 காட் அட்டைகளது பற்றாக்குறை நிலவியது. | காட் அட்டைகளை வழங்குவதும் விண்ணப்பங்களைப் பேணுவதும் முன்கூட்டியே தீர்மானித்து கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் 383,465 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டியிருந்தன. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1401 ஆகும். உள்ளவாறான பதவியணி 1276 ஆகும். பட்டதாரி பயிலுனருக்குத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி இல்லாததுடன் 125 பேர் ஆட்சேர்க்கப்பட்டுமிருந்தனர். | தேவைக்கேற்ப வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்கு பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>சில வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறுகின்றது. |